பக்கங்கள் 6

விலை ரூபா: 7.00

# சங்கமம்
# SANGAMAM

[கூட்டுறவுக் குரல் Voice of Co op]

" அகர முதல் எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே யுலகு "

ஆறு 1 திருவள்ளுவர் ஆண்டு 2028 டிசம்பர் 1997 அருவி 4

# கிராமிய வங்கிகளின் மாவட்ட சமாசம்
# கிளி - மாவட்டத்தில் திறக்க ஏற்பாடு!

## வங்கி அமைக்கும் பணி ஒன்றியத்திடம் கையளிப்பு!

கிளிநொச்சி மாவட்டத்தில் கிராமிய வங்கிகளின் மாவட்ட சமாசம் திறப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன.

இம்மாதம் (டிசம்பர்) 11ம் திகதி கிளி-மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. தி. சபாரெத்தினம் அவர்களின் தலைமையில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பொதுமுகாமையாளர்கள் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக மேற்படி சமாசம் அமைக்கப்படவுள்ளது, இதன் பிரகாரம் வங்கி கட்டமைப்பு அமைக்கும் பணிகள் கிளி மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியத்திடம் கிளி-மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன.

இலங்கை முழுவதற்கும் முன்னோடியாக யாழ் திருமலை, மட்டக்களப்பு மற்றும் தென்னிலங்கை எங்கும் மாவட்டம் தோறும் கிராமியவங்கிகளின் மாவட்ட சமாசம் அமைக்கும் வேலைகள் முழுவீச்சாக நடைபெற்று வருகின்ற இவ் வேளையில் கிளிநொச்சிமாவட்டத்திலும்கிராமிய வங்கிகளின் மாவட்ட சமாசம் அமைக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு இன்றியமையாதது அந்நாட்டின் சமூகபொருளாதார அபிவிருத்தி ஆகும். மனிதவள மேம்பாட்டிற்கும் சுயசார்பு சமூக கட்டமைப்பை உருவாக்குவதற்கும்பெருந்துணையாக இருப்பவை வங்கிகளே தங்கு நிலையிலுள்ள மக்களை சுயசார்பு நிலைக்கு மாற்றுவது அவசியமாகும்.

கடன்களை வழங்கி மக்களை தொழிலில் ஈடுபடுத்தல், வங்கி கட்டமைப்பின் மூலம் எமது மண்ணின் தனித்துவத்தைப்பேணல் ஆகிய இலக்குகளை கொண்டவையாக இவ்வங்கி செயல்படும்.

கூட்டுறவு நிறுவனங்களுக்கு வங்கி இல்லாத காரணத்தினால் பல்வேறு நிறுவனங்களுக்கும் வரி, வட்டி, தரகு என்பவற்றை கூடுதலாக செலுத்துகின்ற நிலை தொடர்ந்து வந்துள்ளது.

கூட்டுறவு கிராமிய வங்கி உள்ள போதிலும் அது அரச வங்கியின் கட்டுப்பாட்டில் இருப்பதனால் சிறப்பான சேமிப்புத்திட்டத்தை உருவாக்க முடியாத தேக்கநிலை உள்ளது. இக்குறைகளைப் போக்கி கிராமிய பொருளாதார அபிவிருத்திப்பயன்பாடுகளுக்கென வங்கி மூலம் நிதிகளைப் பெற்று மாவட்ட வளர்ச்சிப் பணிகளுக்கு பயன்படுத்த முடியுமென எதிர் பார்க்கப்படுகிறது



" உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக
உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக "

வாசக நெஞ்சங்கள் அனைவருக்கும்
எமது கிறிஸ்மஸ் புதுவருட
வாழ்த்துக்கள் உரித்தாகுக சங்கமம்

## அரிசி ஆலைகள் திறப்பு

நெல் உற்பத்தியில் ஈடுபடும் சிறு விவசாயிகள், மற்றும் பொதுமக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்குடன் கிளி-மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களினால் அரிசி ஆலைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

கரைச்சி வடக்கு ப.நோ.கூ சங்கத்தினால் வட்டக்கச்சியிலும், அக்கராயன் ப.நோ.கூ. சங்கத்தினால் அக்கராயனிலும், கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கத்தினால் வன்னேரிக்குளத்திலும் அரிசி ஆலைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆலைகளின் திறப்பு விழாக்களில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பொது முகாமையாளர்கள், நெறியாளர் சபை உறுப்பினர்கள் கூட்டுறவுப்பணியாளர்கள் மற்றும் கூட்டுறவாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கிளி - கூட்டுறவுக் கல்லூரி
இறுதிப் பரீட்சைகள்

1997 மே - 1998 ஜனவரி காலபகுதிக்கு நடாத்தப்பட்டுவரும் கூட்டுறவுப்பணியாளர் உயர்தர பயிற்சி நெறிக்கான இறுதிப்பரீட்சை எதிர்வரும் 1998-02-02ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இறுதிப் பரீட்சைகள்
(சாதாரண தரம்)

1997 ஜூலை- டிசம்பர் காலப்பகுதிக்கு நடாத்தப்பட்டுவரும் கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தர இறுதிப் பரீட்சைகள் 1997-12-23ம் திகதி ஆரம்பமாகியுள்ளன.

# கூட்டுறவுப் பணியாளர்களுக்கு புதிய சம்பளத்திட்டம் அறிமுகம்!

10-11-1997ஆம் திகதிய 81/97ஆம் இலக்க சம்பள மீளாய்வு சுற்று நிருபம் வெளிவந்துள்ளது

கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் 165/88 சுற்று நிருபம் மூலம் இதுவரை பெற்று வந்த அடிப்படைச் சம்பளத்தையும், வாழ்க்கை செலவுப் படிகளையும், 30வீத உயர்வுகளையும் உள்ளடக்கி அறித்துரைக்கப்பட்ட வீத உயர்வு வழங்கி புதிய சம்பளத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது

இத் திட்டத்தின் கீழ் இனி வரும் காலங்களில் எதுவித படிகளும் ஊழியர்களுக்கு வழங்கப்படக் கூடாது என வரையறை செய்யப்பட்டுள்ளது அத்துடன் பழைய சம்பளத் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட பதவியில் தொடர்ச்சியாக கடமையாற்றும் ஒருவர் பதினைந்து வருடங்களுக்கு மட்டுமே வருடாந்த சம்பள உயர்வினை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த வேளை, புதிய சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் இருபது வருட சேவை சம்பள உயர்வு வழங்கப்படுவதுடன் உச்ச நிலையை அடையும் பணியாளர்களுக்கு இரு வருடத்திற்கு ஒரு சம்பள உயர்வு எனும் 'தேக்க நிலைச் சம்பள உயர்வு' வழங்கும் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும் அத்துடன் சம்பள ஏற்றத் தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

இச் சம்பள அளவுத் திட்டப் பிரகாரம் பணியாளர் பின்வரும் நன்மைகளை பெற்றுக் கொள்வார்கள்

1. புதிய சம்பள அளவுத் திட்டத்திற்கும் பழைய மொத்த சம்பளத்திற்கும் இடையிலான அதிகரிப்பிற்கு ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றை பெற்றுக் கொள்ளுதல்,
2. வருடாந்த சம்பள உயர்வுத் தொகை அதிகமாக பெறுதல
3. மேலதிக நேரப் படி, பிரயாணம், படிகள் என்பன வீதாசார அடிப்படையில

(6-ம் பக்கம் பார்க்க)

## விதை உற்பத்தி
(SPAK)

கிளி மாவட்ட விதை உற்பத்தியாளர் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. சர்வதேச கெயார் ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி சங்கம் மக்களின் உடனடி தேவைகளைக் கருத்திற் கொண்டு கூட்டுறவு சட்ட விதிகளுக்கு அமைவாக பதிவு செய்யப்பட வேண்டுமென கூட்டத்தில் கலந்து கொண்ட பேராளர்கள் கேட்டுக் கொண்டனர்.

## கிறிஸ்மஸ் பெருவிழா அன்பளிப்பு

கிளி/மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தின் சார்பாக கிறிஸ்துவின் பிறப்பு விழாவை முன்னிட்டு வணபிதா கில்லறி ஜெபநேசன் அடிகளாரின் நினைவாக 'ஜெபநேசன் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையம்' அக்கராயனில் உள்ள 139 வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டது. ஒளி விழா நிகழ்ச்சியும் சிறப்பாக நினைவு கூறப்பட்டது.

# சூரியன்

### 25 கோடி ஆண்டுகள் ஒரு பிரபஞ்ச வருடம்

ஆகாய வெளியில் இது ஒரு விண்மீன்; தவிர கணிப்புகளின்படி உடுமண்டல மையத்தில் இருந்து சுமார் 32 000 ஒளித்துண்டுகள் தொலைவில் உள்ள சூரியன் தன்னோடு ஒத்துழைத்த விண் மீன்களுடன் நொடிக்கு 250 கி மீ வேகத்தில் உடுமண்டல மையத்தைச் சுற்றி பயணம் செய்கின்றது இந்தக் கணக்கில் ஒரு முறை உடுமண்டலத்தைச் சுற்றி வர 25 கோடி ஆண்டுகள் ஆகும். இதுவே ஒரு பிரபஞ்ச வருடம் எனக் கூறப்படுகிறது.

சாதாரண விண்மீன்களைப் போலவே சூரியனும் ஹைட்ரஜன் வளிமத்தால் ஆனது தான் அதனுள் இடையறாது நிகழ்ந்து கொண்டிருக்கும் அணுக்கரு மோதல்களினால் தொடர்ந்து ஆற்றல் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது ஒரு நொடிக்குள் அணுக்கரு வினை புரியும் ஹைட்ரசனின் நிறை இலட்சம் கோடி கிலோ வாகும் உத்தேசமாக 45 கோடி தொன்கள், இந்த ரீதியில் போனால் இன்னும் 50 கோடி ஆண்டுகளுக்குள் சூரியன் தன் ஹைட்ரஜன் முழுவதும் தீர்ந்து செம் பூதமாக மாறக் கூடும் அந்த நிலையில் அதன் செந்நிறப் பொலிவுடன் விளங்கும் பருமகோள் நூறுமடங்கு பெருகியிருக்கும்.

அந் நிலையில் அதன் பக்கத்தல் உள்ள புதனும் வெள்ளியும், சூரியன் வெப்பத்தில் உருகிப்போகியிருக்கும்,

புவியில் கடல்கள் வற்றி ஆவியாகிப் போகும் உலகில் வெறும் பாறை மட்டும் மிஞ்சும் காரியத்தை உருக்கிவிடும் அளவிற்கு உயிரினங்கள் வாழுமா என்ற கேள்விக்கு இடமே இல்லை எல்லாமே அழிந்திருக்கும்:

தகவல்;

# மூடனுக்கு சொன்ன புத்திமதி

## பஞ்சதந்திரக்கதைகள் 2

ஒரு காட்டில் குரங்கு கூட்டம் வசித்து வந்தது குளிர் காலம் தொடங்கியதும் குரங்குகள் குளிரால் வாடிக் கொண்டிருந்தன, இரவில் ஒரு மின மினிப் பூச்சியைக் கண்டு அது நெருப்பு என்று எண்ணியபடி அதைப் பிடித்து காய்ந்த புல்லையும் சருகுகளையும் அதன மேல் போட்டு மூடி விட்டன, அதைச் சுற்றிலும் குரங்குகள் குளிர் காய்வதற்கு உட்கார்ந்து கொண்டு கைகளையும், வயிற்றையும் மார்பையும் அதன் முன் காட்டியபடியே குளிர் காய்வதாக நினைத்து இன்புற்றுக் கொண்டிருந்தன,

அவற்றில் ஒரு குரங்கு மிகவும் வாடியது சருகுக் குவியலின் மீது கவனம் செலுத்தி தீப்பற்றிக் கொள்வதற்காக பூ பூ என ஊதிக்கொண்டிருந்தது,

அந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்த சூசிமூகன் என்னும் பறவை மரத்திலிருந்து கீழே இறங்கி வந்தது: அதற்கு ஆயுள் நெருங்கி விட்டது போலும்.

குரங்கை நோக்கி ''தோழா'' வீணாக ஏன் சிரமப்படுகிறாய் அது நெருப்பு அல்ல மின்மினிப் பூச்சிதான். எவ்வளவு தான் நீ ஊதிய போதிலும் அதிலிருந்து நெருப்பு உண்டாகாது'' என்று சொல்லியது,

பறவை சொல்வதைக் காதில் வாங்காமல், குரங்கு ஊதிக் கொண்டே இருந்தது, பலமுறை பறவை சொல்லியும் குரங்கு ஊதுவதை நிறுத்தவில்லை மறுபடியும் அந்தப் பறவை குரங்கின் காதருகில் போய் உரக்கக் கத்தியது குரங்கு உடனே அதைப் பிடித்து அருகில் இருந்த கல்லின் மேல் ஓங்கி அறைந்தது, அவ்வளவு தான் பறவை நொருங்கி இறந்தது"

சுபம்

# அறிந்து கொள்ளுங்கள்

## மாத மிரு நாடு

### சிரியா

| | | |
|---|---|---|
| தலைநகர் | - | டமாக்ஸ் |
| பரப்பு | - | 1 38 44 000 |
| மொழி | - | அரபி, குர்திஸ் ஆர்மினியன் |
| சமயம் | - | இஸ்லாம் |
| நாணயம் | - | சிரியன் பவுண்ட் |
| எழுத்தறிவு | - | 65% |
| சராசரி ஆயுள் | - | 68% |

1920 இல் துருக்கியின் சில பகுதிகளையும் இணைத்து உருவாக்கப்பட்டது பிரான்ஸ் லீக் ஆப் நேசன்ஸ் ஒப்பந்தப்படி பிரான்ஸ் ஆட்சி செய்தது 1941 ல் பிரான்ஸ் குடியரசாக அறிவித்தது 1944 ல் சுதந்திரம் அடைந்தது 1958 ல் எகிப்துடன் சேர்ந்து ஒன்றுபட்ட அரபுக் குடியரசு உருவாக்கப்பட்டது. 1961 ல மீண்டும் தனிநாடானது


### கிரெளடா

| | | |
|---|---|---|
| தலைநகர் | - | செயின்ட் ஜார்ஜ்ஸ் |
| பரப்பு | - | 344 ச. கி. மீ |
| மக்கள் தொகை | - | 92.000 |
| மொழி | - | ஆங்கிலம், பிரெஞ்சு ஆபிக்கன், படோப்ஸ் |
| சமயம் | - | கிருத்தவம் |
| நாணயம் | - | கிழக்கு கரிபியன் டாலர் |
| எழுத்தறிவு | - | 81% |

கிழக்கு கரிபியன் கடலில் அமைந்துள்ள வின்வார்ட் தீவுக்கூட்டங்களின் தெற்கே அமைந்துள்ளது. பிரிட்டன் 1974 ல் சுதந்திரம் வழங்கியது 1983 ல் இராணுவப்புரட்சி சோவியத் யூனியன் துணையுடன் அரசு அமைக்கப்பட்டது. 1983 ல் அமெரிக்க ஆக்கிரமித்தது. 1984 ல் பொதுத்தேர்வில் நடை பெற்றது

சிறுவர் பெட்டகம்

## 'சங்கமம' குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம் - 3



**இடமிருந்து வலம்**

இலக்கம்- 1 வன்னிப் பெரு நிலப்பரப்பு கூட்டுறவாளர்களின் குரலான மாத இதழ்

இலக்கம் - 9 மாதம்; ஒத்த சொல் - வாரத்தின் ஒருநாள் (குழம்பியுள்ளது)

இலக்கம் - 13 இந்தச் சண்டையில் புகழ்பெற்றவர் முகமட் அலி (குழம்பியுள்ளது)

இலக்கம் - 19 அச்சம், பயம் ஒத்த சொல்

இலக்கம் - 25 ஐவகை நிலத்தில் ஒன்று - கடைசி எழுத்து விடுபட்டுள்ளது

இலக்கம் - 28 பெண்களின் அணிகலன்களில் ஒன்று - கணபதியே பெருமகதைக்கு ——

இலக்கம் - 33 மடித்துக் கொடுக்கும் மங்கலப் பொருள் கொடியில் விளைவது குழம்பியுள்ளது

**மேலிருந்து கீழ்**

இலக்கம் - 1 விசாலமான நீர்ப்பரப்பை இப்படி அழைப்பர் - குழம்பியுள்ளது

இலக்கம் - 3 இரவு, இருள் ஒத்த சொல்

இலக்கம் 4 நிலா, சந்திரன் ஒத்த சொல்

இலக்கம் - 5 பாண், பணிஸ் உற்பத்தி நிலையம் - தலை கீழாக குழம்பியுள்ளது.

இலக்கம் - 14 திரெளபதைக்கு இதை உரிந்த துச்சாதனன் மயங்கி வீழ்ந்தானாம்

இலக்கம் - 28 கதிரவன் ஒளியேற்ற இருள் விலகும் நேரம்

இலக்கம் - 30 கறையானின் வீட்டை இப்படி அழைப்பர் கடைசி எழுத்து விடுபட்டுள்ளது.

## 'சங்கமம்' தேடல்அரங்கு 3

### வினாக்கள்

1. சர்வதேச கூட்டுறவு அமையம் எந்த ஆண்டில் உருவாக்கப்பட்டது?
2. அண்மையில் இடம்பெற்ற பூரண சந்திர கிரகணம் எந்த மாதம், திகதியில் இடம் பெற்றது?
3. தமிழீழத்தில் மிகப் பெரிய குளம் எது?
4. விடுதலைப்புலிகளின் மூத்த தளபதியும் மத்திய குழு உறுப்பினருமான லெப் - கேணல் விக்ரர் வீரச்சாவடைந்த தினம் எது?
5. அமெரிக்காவின் விண் ஆய்வு நிறுவனத்தின் பெயர் என்ன?
6. சாரணர் இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
7. கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தினால் 75 வது சர்வதேச கூட்டுறவு தினவிழா நடாத்தப்பெற்ற தினம் எது? (ஆண்டு, மாதம், திகதி தருக)
8. பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் எது?
9. இலங்கையில் முதலாவது கூட்டுறவுச் சங்கம் எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது?
10. சக போட்டியாளரின் காதைக் கடித்ததால் களங்கத்தை தேடிக்கொண்ட உலக குத்துச்சண்டை வீரன் யார்?

போட்டி முடிவுத் திகதி :-

அனுப்பவேண்டிய முகவரி-
தேடல் அரங்கு - 3
சங்கமம் பணிமனை,
ஸ்கந்தபுரம்.

## இலக்கஞ்சி வழங்கல்

கிளிநொச்சிமாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தின் பாடசாலை மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் திட்டத்தின் கீழ் அண்மையில் இரு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கல் ஆரம்பிக்கப்பட்டது.

சென்ற புதன்கிழமை கரிநாகபடுவான இல. 2 அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் முழங்காவில் எழுச்சிக்கிராமத்தில் அமைந்துள்ள இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்திலும் கல்வி பயிலும் 3 ம் ஆண்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் வைபவம் புங்குடுதீவு-நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## இந்து தர்மம

எவன் ஒருவன் சூரிய உதயத்திற்கு முன்பு குளித்து தெய்வ சிந்தனையில் ஈடுபடுகிறானோ: அவனுக்கு உடல் பலம், அழகு, நல்ல சரீரம், வாக்கு பலிதம், நல்ல குணம், தர்மசிந்தனை, கௌரவம், புகழ் செல்வாக்கு, தனம் என பலவுண்டு.

## உலகில் உயரமானவை

- பெரிய விலங்கு நீலத்திமிங்கிலம் 1909 இல் போகலிலாந்து தீவில் தரை ஒதுங்கியது.
- உயரமான யானை நன்கு வளர்ந்த ஆப்பிரிக்கா யானையின் சராசரி உயரம் 10 6 அடி
- உயரமான மரம் கலி போர்ணியாவிலுள்ள செவ்வு மரவகையைச் சார்ந்தது 1958ல் இதன் உயரம் 367 8 அடி ஆகும்.
- உயரமான மனிதன் விறாஜி முகமது ஆலம் சன்னா (பிறப்பு 1955) பாகிஸ்தான் மற்றும் நானுட்போல்பிறப்பு 1962) சூடான் இருவரும் சராசரி உயரம் 7.8 அடி

## மாணவர் மன்ற விழா

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுக் கல்லூரியின் கனிஷ்ட மாணவர் மன்ற விழாவும், கலைமகள் விழாவும் கிளி மாவட்ட கூட்டுறவுசபை கேட்போர் கூடத்தில் மன்ற தலைவர் செ. இருபாகரன் தலைமையில் நடைபெற்றது. முதன்மை விருந்தினராக கிளி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தலைவர் திரு சூ. சிறில் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கிளி- மாவட்ட கூட்டுறவுச் சபையின் பணிப்பாளர் திரு. அ. கேதீஸ்வரன் அவர்களும், செயலாளர திரு. க. சிவகுமார் அவர்களும் கல்லூரிவிரிவுரையாளர் திரு. ச. அயலதாஸ் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் மற்றும கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன

முதலாளித்துவ உலகின் வறிய மக்களின் பாதுகாவலன்

## கூட்டுறவு தான்

தலைவர் க. தெ ப. நோ கூ ச

மட்டுப்படுத்தப்பட்ட ஒரு சிலரிடம் கூட்டுறவு நன்மைகள் தேங்கியிராது பரவி பலருக்கும் சென்று சேர்வதில் விழிப்பாக இருக்க இளைய தலைமுறையினருக்கு சிந்தனைகள் வழங்கப்பட வேண்டுமென அண்மையில் நடைபெற்ற மாணவர்களுக்கான கருத்தமர்வில் கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. சி சிவஞானம் அவர்கள் தெரிவித்தார.

அவர மேலும தெரிவிக்கையில் மாணவர்கள் எமது சமுதாயத்தின் எதிர்கால சிற்பிகள் இவர்களே எதிர்கால தலைவர்கள் கூட்டுறவுத் தலைமைக்கும் முகாமைக்கும் தயார்படுத்துவதில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பாரிய கட்டுப்பாடுள்ளது.

ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும் வாழ்வோம்; அதுவே ''உயர்ந்த கூட்டுறவு''

# துயர்துடைப்புப் பணியில் கூட்டுறவுச் சங்கங்கள்

ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும் இயங்கி வரும் கூட்டுறவு அமைப்பானது சமூக பொருளாதார அரசியல் விவகாரங்களில் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வளர்ச்சியடைந்தது வரலாறு. கைத்தொழில்மயப் புரட்சியினால் தோன்றிய இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டு சர்வதேசம் எங்கும் வேரூன்றி இன்று திட்டமிட்டபடி நசுக்கப்பட்ட எம் தமிழினத்தினை ஆரிய பொருளாதார விடிவுக்காக பங்கேற்றுச் செயற்பட்டு வருகின்றன. இந்த வகையில் இராணுவ அழுத்தத்தால் யாழ் குடாவில் இருந்து மக்கள் லட்சோப லட்சமாக வெளியேற்றப்பட்டு மழையில் நனைந்து, குளிரால் விறைத்து உணவின்றி உடுத்த உடையுடன் வன்னிப் பெருநிலப்பரப்பை நாடி ஓடோடி வந்தபோது ஆதரவு கொடுத்தவர்களுடன் இணைந்து உணவு கொடுத்து உரிய இடங்களுக்கு சென்று சேர்ப்பிக்க தேவையான போக்குவரத்து ஒழுங்குகள் செய்து அன்புக்கரம் நீட்டி ஆறுதல் அளித்ததில் பெரும் பங்கு வகித்தது கூட்டுறவுச் சங்கங்கள் சிறிலங்கா அரசு சூரியக்கதிர் I இல் வந்தவர்களை அரைப்பட்டினி போட்டது. சூரியக்கதிர் II இல் வந்தவர்களை முழுப்பட்டினி போட்டது. சத்ஜெய எரிபல ஜயசிக்குறு நடவடிக்கையில் இடம் பெயர்ந்தவர்களை கடும் பாதிப்புக்குள் தள்ளியது இந்த அவல நேரத்தில் வன்னிப் பெருநிலப்பரப்பில் இயங்கிய கூட்டுறவுச்சங்கங்களுடன்; யாழ் குடாவிலிருந்து மக்களோடு மக்களாக இடம்பெயர்ந்து வந்த யாழ்ப்பாணம், வேலணை, புங்குடுதீவு- நயினாதீவு ஊர்காவற்துறை, தெல்லிப்பழை, அளவெட்டி, மல்லாகம், வடமராட்சி கிழக்கு, காரைநகர் ப. நோ கூ சங்கங்களும் தமது வளங்களைப் பயன்படுத்தி நான்முந்தி நீமுந்தி என எம்மினத்தின் அவலத்தை ஓரளவு நீக்கியது; சகலரும் அறிந்ததே, இதனை நெறிப்படுத்த கூட்டுறவு திணைக்களமும் இணைந்து கொண்டது. இவற்றுக்கெல்லாம் மேலாக கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் இணைந்து முதலில் கிளிநொச்சி மாவட்டத்தில் கிளி மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தை 1997-04-29 ஆம் திகதி உருவாக்கி சகல சங்கங்களும் ''கூட்டுறவில் கூட்டுறவு'' என்ற கொள்கைக்கமைய கைகோர்த்து மக்கள் துயர் துடைப்புக்கு கங்கணம் கட்டியுள்ளன, இந்த வகையில் மலர இருக்கும் சங்கமம் பத்திரிகை மூலம் கூட்டுறவின் அடுத்த கொள்கையின் கூட்டுறவுக் கல்வியை முன்னெடுத்து செல்வோம் என்ற நம்பிக்கை எம் அனைவருக்கும் உண்டு

''ஐக்கியமே ஜெயம்''

சி. புவனேஸ்வரன்
பொதுமுகாமையாளர்
கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.ச.

# கூட்டுறவுக் கல்வியின் புதிய பரிணாமம் மாணவர் கருத்தமர்வு

உயர் கற்கை நெறி மாணவர்களுக்கு கூட்டுறவின் மகத்துவத்தை போதிப்பதில் கூட்டுறவாளர்கள் பேரார்வம்

பாடசாலை மாணவர்களுக்கான கூட்டுறவுக்கல்வி கருத்தமர்வு 97-11-02 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கிளி-மாவட்ட கூட்டுறவுச்சபை கேட்போர் மண்டபத்தில் மாவட்டக் கூட்டுறவுச்சபைத் தலைவர் திரு தி இராசநாயகம் அவர்களது தலைமையில் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது இக் கருத்தமர்வில் கிளி-மத்திய கல்லூரியைச் சேர்ந்த பத்து மாணவர்களும் இரண்டு பொறுப்பாசிரியர்களும் கிளி இந்துக்கல்லூரியைச் சேர்ந்த பத்து மாணவர்களும் ஒரு பொறுப்பாசிரியரும் கிளிபுனித திரேசா பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த ஏழு மாணவர்களும் கிளி-உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஒன்பது மாணவர்களும் ஒரு பொறுப்பாசிரியரும் கிளி-அக்கராயன் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த பத்து மாணவர்களும் மொத்தமாக 50 பேர்கள் பங்குபற்றினர்

பயிற்சியின் நோக்கம் பற்றி கல்வி உத்தியோகத்தர் திரு அபராஜிதன் விளக்கினார் மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் தி இராசநாயகம் கரைச்சி தெற்கு ப. நோ. கூ சங்கம் பொதுமுகாமையாளர் தி. கிருபாகரன் கிளி-மாவட்ட கூட்டுறவு சபை விரிவுரையாளர் த. பத்மானந்தன் கூட்டுறவுக்கல்லூரி விரிவுரையாளர் ச பி. அமலராசா அ கேதீஸ்வரன் ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்தினார்கள் இக்கருத்தமர்வு மாணவர் மத்தியில் கூட்டுறவை வளர்த்தெடுப்பதற்கு பெரும் துணையாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது

# தபால்சேவை ஒழுங்குபடுத்தப்படும்

நுண்ணாய்வுப் பரிசோதகர்

கிளிநொச்சி மாவட்ட தபால் சேவையில் உள்ள குறைபாடுகள் சம்பந்தமாக மாவட்ட தபால் திணைக்கள நுண்ணாய்வுப் பரிசோதகர் திரு நா. ஜெயரத்தினம் அவர்களுடன் கிளி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பொதுமுகாமையாளர்கள் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

அண்மையில் கிளி-மாவட்ட நிர்வாக சேவை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் கிளி மாவட்ட தபால சேவையில் உள்ள பின்னடைவுகள் பற்றி பல பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர் அதற்குப் பதிலளித்த நுண்ணாய்வுப் பரிசோதகர் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக கிளி-மாவட்ட தபாற்கந்தோர்கள் ஒரு நுண்ணாய்வுப் பரிசோதகர் இல்லாமல் இயங்கி வந்ததை சுட்டிக் காட்டியதுடன் குறைபாடுகளை நீக்க தம்மால் இயன்ற உதவிகளை செய்வதாக உறுதியளித்தார்.

புதிய கிராமங்கள் குடியிருப்புக்களில் உப தபாலகங்கள் திறந்து வைக்கப்படல் வேண்டும் தென்னிலங்கையில் இருந்து தாராந்தம் தபால்கள் வந்து சேர நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் முத்திரைகள் தாராளமாக கிடைக்க ஒழுங்கு செய்தல் வேண்டும் இன்று எங்குமே காணப்படாத தபாற் பெட்டிகள் உடனடியாக மக்கள் பாவனைக்கு வைக்கப்படல் வேண்டும் தபால் ஊழியர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட வேண்டும் சீரான சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு தபால் கந்தோர்களுக்கு புதிய நியமனங்கள் வழங்கப்படல் வேண்டும். ஆகிய கோரிக்கைகள் கூட்டுறவுப் பிரதிநிதிகளால் முன் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இருபதாம் அகவை நிறைவு

ஊர்காவற்றுறை பல. நோ. கூ. சங்கம் தனது இருபதாம் ஆண்டு நிறைவை ஸ்கந்தபுரத்தில் அமைந்துள்ள தலைமைப் பணிமனையில் தலைவர் இ. சுந்தரலிங்கம் அவர்கள் அண்மையில் கொண்டாடியது இடம் பெயர்ந்து பல வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சிறந்த சேவையாற்றி வருவதை பலர் பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

பயிற்சி வகுப்பு

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கத்தின் கிளைமுகாமையாளர்கள் விற்பனையாளர்களுக்கான பயிற்சி வகுப்பு அண்மையில் மேற்படி சங்கத் தலைவர் சி சிவஞானம் அவர்கள தலைமையில நடைபெற்றது

# முத்திரையோ முத்திரை

கடிதப்போக்குவரத்துக்காகவும் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பணவழங்கல் முறையின் போதும் உடன்படிக்கைகளின் போதும் பயன்படுத்தப்படும் அரசின் வரியை தேடிக்கொடுக்கும் முத்திரை இன்று எமது பகுதியில் தபாலகங்களில் இல்லாத நிலையிலும் தனியார் கடையில் பன்மடங்கு விலையிலும் விற்கப்படுகின்றன அரசின் தடை விதிக்கப்பட்ட பொருட்களுக்கான பட்டியலில் முத்திரை அடங்கவில்லை. தட்டுப்பாடு நிலவக்காரணம் என்ன? ஐயா பொறுப்பானவர்களே! கவனமெடுத்து மக்கள்கஸ்டம் தீர்ப்பீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

க. செல்வம்
ஊர். ப நோ. கூ. சங்கம்

## என் இதயமே

மாதமொருமுறை மலரும் மலரே
என் இதய சங்கமமே!
மலர்ந்த உன் முதல் இதழே
கூட்டுறவு வாசனையை வீச்சாக்கியது
உன் மலர்வு கண்டிங்கு
வன்னி மண் பெருமை கொண்டது
இன்னும் இன்னும் உன்னிதழ்கள் விரியட்டும்
கூட்டுறவின் புகழதனால் ஓங்கட்டும்
என் இதயமே இனிதே நீ வாழ
இந்நாளில் என் வாழ்த்துக்கள்

க. செல்வம்
ஊர் ப நோ கூ சங்கம்

# தமிழர் புனர்வாழ்வு கழகம் வங்கி திறப்பு

துரிதபனர் வாழ்வு வேலைத்திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கில் சுய சார்பு நிலை அடைந்தசமூகத்தைகொண்ட மண்ணுக்குரிய தனித்துவத்தைப் பேணும் வங்கி கட்டமைப்பை உருவாக்கும் நோக்கில்; சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி'' 24.8.97 அன்று கிளி- ஆனைவிழுந்தான் பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் வங்கி உருவாக்கப்பட்டதை தொடர்ந்து பல பன்னாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் நிதி நிறுவனங்கள இவ் வங்கியின் ஊடாக தமது சுழற்சி முறை கடன் திட்டங்களை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட இருப்பதாக அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

# கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்க விதை நெல் திட்டம்

கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் விதைநெல் திட்ட பயனாளிகளுக்கான பயிலரங்கு ஒன்று அண்மையில் ஸ்கந்தபுரத்தில் இயங்கும் மேற்படி சங்கதலைமைப் பணிமனையில் சங்கத் தலைவர் திரு. சி. சிவஞானம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது

கரைச்சி தெற்கு ப நோ. கூ சங்கத்தின் விதைநெல் திட்டமும் அதன் போக்கும் இலங்கை வங்கியினால் இவ்வாண்டு புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சேமிப்புத்திட்ட அறிமுகம் கடனும் கடன் தருதியும்- ஓர் நோக்கு ஆகிய விடயங்களை உள்ளடக்கி இப் பயிலரங்கு நடாத்தப்பட்டது அகில உலக 'கெயார்' ஸ்தாபனத்துடன் இணைந்து 1994 ம் ஆண்டு ஆரம்பகட்டமாக காலபோக விதைநெல் திட்டமாக 22 பயனாளிகளை தெரிவு செய்து மேற்படி திட்டத்தை இக் கரைச்சி தெற்கு ப நோ கூ.சங்கம் நடைமுறைப் படுத்தியது அவ்வண்டில் 53 ஆக அதிகரித்த பயனாளிகளின் எண்ணிக்கை 1995- 1996 காலப் பகுதி வரை தொடர்ந்தது.

1996 - 1997 காலப்பகுதியில் இத்திட்டத்தில் செயற்பட்ட பயனாளிகள்சிலரது முரணான நடவடிக்கை காரணமாகவும் 1997 - 1998 காலப் பகுதியில் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் பயனாளிகளின் எண்ணிக்கை இருபதாக குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

# தமிழ்நாட்டு செய்திகள்

கலைஞர் கருணாநிதிக்கு மூதறிஞர் பட்டம்

தமிழ்நாட்டில் தமிழர் இயக்கத்தை ஆரம்பித்தவரும் தினத்தந்தி, மாலைமுரசு பத்திரிகைகளின் ஸ்தாபகருமான சி.பா ஆதித்தனார். அவர்கள் பெயரில் இலக்கிய பரிசளிப்புவிழா சமீபத்தில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது இவ்விழாவில் கலைஞர் கருணாநிதிக்கு ''மூதறிஞர்'' என்ற உயர் விருது வழங்கப்பட்டுள்ளது

அதுபோல் எழுத்தாளர் பிரபஞ்சனுக்கு ''சந்தியா'' என்ற நாவலுக்காகவும் இலக்கிய பரிசு வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவ தாதிகளுக்கு வயதெல்லை நீக்கப்படும்

தமிழ் நாட்டிலுள்ள சகல அரச மருத்துவ மனைகளில் சேவையில் சேர விரும்பும் மருத்துவ தாதிகளுக்கு வயது வரம்பு இரத்து செய்யப்படுமென தமிழக சுகாதார அமைச்சர் அறிவித்துள்ளார்

24 மணிநேரமும் இயங்கும் சுகாதார மையம்

தமிழ் நாட்டில் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் 24 மணிநேரமும் செயற்படும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்படும் என முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

# வள்ளுவன் தந்த கூட்டுறவு

தனி மனிதனாய் வாழ்ந்து தடுமாறிக் கொண்டிருப்பதை விட நான்கு பேருடன் சேர்ந்து கூடி வாழ்வது நல்ல பலனைத் தரும் "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்னும் சான்றோர் வாக்குகள் இதனையே உறுதிப்படுத்துகின்றன. இதன் அடிப்படையில் 1862ம் ஆண்டு ஜெர்மனியைச் சேர்ந்த இராயப்சீன் என்பவரால் முதன் முதலாக கூட்டுறவு இயக்கம் தோற்றுவிக்கப்பெற்றது.

இன்றைக்கு அது நல்ல பல சாதனைகளை சாதித்து தனி மனிதனின் வேதனைகளைத் தீர்த்து வருகின்றது. கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை ஒருவர் பலருக்காகவும், பலர் ஒருவருக்காகவும் வாழ்வதே

இத்தகைய வாழ்வுக்கு பழகியவரிடத்தில் நெகிழ்ந்து நடக்கும் பண்பு வேண்டும். இந்தப் பண்பு மக்களின் வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது மட்டுமல்ல மிகச்சிறந்த அழகாகவும் விளங்குகிறது. அந்தப்பண்பு இருப்பதால் தான் உலகியல் நடைபெறுகிறது கூட்டுறவு வளருகின்றது இவ்வாறு பழகியவரிடத்தில் நெகிழ்ந்து நடக்கும் பண்பு இல்லையானால் ஒருவரை ஒருவர் சீறுவதும் சினப்பதுமே வாழ்க்கையாக இருக்கும் சிங்கமும் மற்றக்கொடிய விலங்குகளும் வாழும் காடு போலாகும் மாறித் தோன்றும் ஆகையால் உலகத்தில் சமுதாய அமைப்பிற்கும் கூட்டுறவு அமைப்பிற்கும் கண்ணோட்டம் அடிப்படையாக இருக்கிறது. நெகிழ்ந்து நடக்கும் பண்பே கண்ணோட்டமாகும் இதையே வான் மறை தந்த வள்ளுவர் "கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை உண்மையான் உண்டிவ்வுலகு"

வே, பரமநாதபிள்ளை
செயலாளர்
தமிழ்ச் சங்கம், கிளிநொச்சி.

(571) "கண்ணோட்டத்து உள்ளது உலகியல் அஃதிலார் உண்மை நிலக்குப் பொறை" (572) கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம், அஃதின்றேல் புண் என்று உணரப்படும் (575) என்ற குறள்களால் அறிவுறுத்துகின்றார் அதனாலேயே மக்கள் நூற்றுக்கணக்காயும், நூறாயிரக்கணக்காயும் சேர்ந்து பழகவும் கூடி கூட்டுறவுடனும் வாழ முடிகின்றது.

ஒருவரோடு ஒருவர் கை குலுக்குவது போன்ற அமைப்பினை உடையது இதன் சின்னம் இது ஒற்றுமையை வலியுறுத்துகிறது. வானவில்லில் ஏழு நிறங்களையும் தன்னகத்தே கொண்டது இதன் கொடி இது பலர் கூடிச் செயலாற்றும் பாங்கினைத் தெளிவுபடுத்துகின்றது. "கூட்டுறவு நாட்டுயர்வு" என்பது வெறும் வெற்றுரையன்று அழுத்தமும் பொருத்தமும் கொண்டதாகும். வீடு கூட்டுறவு அடிப்படையில் உயர்ந்தால் ஊர் உயரும் ஊர் உயர்ந்தால் நாடு உயரும் ஆகையால் நாட்டிலோ கூட்டுறவுச்சங்கங்களிலோ நிறுவனங்களிலோ பல குழுக்கள் உடனிருந்தே கொல்லும் உட்பகை இவற்றை ஆட்டி அலைக்கும் கூட்டத்தாரும் இருக்கலாகாது இதை சமுதாய நல்வாழ்வுக்கு இலக்கணம் வகுத்த வள்ளுவன் "பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும் கொல்குறும்பும் இல்லது நாடு" என்றார் (735) நாட்டுக்காக வள்ளுவன் கூறியது சங்கங்களுக்கு அல்லது நிறுவனத்திற்கும் பொருந்தும்

கூட்டுறவு ஒரு சமூகத்தில் நட்புறவை வளர்க்கின்றது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துகிறது. நல்லெண்ணங்களையும் திறமையையும் ஆளுமையையும் கூட்டுமனப்பான்மையையும் உருவாக்குகின்றது. கூட்டுறவுடையவர்களிடையே நல்லறிவுடையவர் நட்புபிறை நிறைவது போல் நாள்தோறும் வளரும் அறிவில்லாதவர் நட்பு நிறைமதி குறைவது போல் நாள்தோறும் குறையும். இடத்தின் தொடர்பும் பழக்கமும் இல்லாமலும் கூட்டுறவு நட்பு அமையும் உணர்ச்சி கருத்து ஒத்திருந்தால் போதும் அந்த ஒன்றே கூட்டுறவுக்கு நட்புக்கு வேண்டிய உரிமையைத் தரும் முகம் மட்டும் மலருமாறு பழகுவது கூட்டுறவு நட்பு ஆகாது அன்பினால் நெஞ்சமும் மலருமாறு பழகுவதே கூட்டுறவாகும். நட்பாகும். நட்புக்கொள்வது அல்லது கூட்டுறவு கொள்வது ஒருவரோடு ஒருவர் சிரித்து நகையாடுவதற்காக அன்று தகாதன செய்து வரம்புமீறும் போது முந்திச் சென்று கடிப்பதற்கும் இவற்றை வள்ளுவர் பின்வரும் குறள்களால் நன்கு தெளிவுபடுத்துகின்றார் "நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்பின் நீர பேதையார் நட்பு" (782)

"புணர்ச்சி பழகுதல்வேண்டா உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்" (785)

"முகம் நக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகம் நக நட்பது நட்பு" (786)

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற்பொருட்டு" (784)

கூட்டுறவு - நட்பு என்பது பொழுது போக்கிற்காகவே என்று சிலர் கருதுகிறார்கள் எனவே ஆடல் பாடல் கேளிக்கைகளுக்காகச் செல்லும் போது துணையாக வரவல்லவர்களையும், உண்பதும் தின்பதும் குடிப்பதுமாகிய சிறு செயல்களுக்குத் துணையாக இருக்க வல்லவர்களையும் புலன்களுக்கு அடிமைப்பட்டுச் செய்யும் குறைகளுக்குத் துணையாய் நடக்க வல்லவர்களையும் கூட்டுறவாளர்கள் நண்பர்கள் என்று கொள்ளக்கூடாது உள்ளம் கலவாது முகம் நட்டகறம் நகுதற் பொருட்டு நட்டகறம் கொள்ளக்கூடாது. பொழுது போக்கிற்குத் துணையாக இருந்து கெடுக்காமல் வாழ்க்கைக்குத் துணையாக இருந்து திருத்த வல்லவர்களையே கூட்டுறவாளர்களாக, நண்பர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

"வாழ்க குறள்!
வளர்க கூட்டுறவாளர்கள்!!

## பூட்டறுத்த புதுவாழ்வு காட்ட வல்லது கூட்டுறவு

"பால் நிலவு சொரியும்
பூ விதழ்கள் விரியும்
கால் நடைகள் திரியும்
கண்கள் அழகைப் பருகும்"
நெஞ்சம் நிறைந்த சுகம்
வஞ்சகர் சுடுத்தார்கள்
பிஞ்சோடு பூவாய் நாம் பெயர்ந்தோம்
மல்லிகைப் பூ மணக்கும் முற்றம்
மகிழ்ந்திருந்த சுற்றம்
அள்ளிக் கையளைந்த மண்
அழகு பூத்த தெருக்கள்
இல்லை: இன்றெமக்கு?
முகமிழந்த மனிதர்;
முகவரி எமக்கில்லை
வெடிகுண்டின் மேல் -
நிற்குமாற் போலெம் இருப்பு
வெள்ளைக் கூரை விரிப்பு
வீதிச் சிறுகுடில்
உள்ளே
பிள்ளைகள் சிணுங்கும்;
பாண் துண்டுக்கும் வழியற்று!
உள்ளச் சுவரில் இடிதாக்கி
வேகும் உடல் முழுதும்
அவலத்தின் 'எவரெஸ்ட்' இம்மண்
இன்னும் — —
இங்கே என்ன மிச்சமிருக்கிறது!
என்றா அழுகிறாய்! அழாதே
ஏ மனிதா; நீ அநாதையல்ல!
உன்னால் முடியும்
இம் மண்ணைச் செப்பனிட!
நிலமும் வளமும் இப்பவும் உன்வசம்
பலம் படைத்தவா கிளம்பு
கலப்பைக்கு வேலை கொடு;
வியர்வை சொரி —
அந்தா பார்!
புழுதி குளித்து நிமிர்கின்றான் ஒருவன்
அவன் பின்னால் நட; ஒன்று படு
பழுத்து விழும் இலைகள் போல்
பறக்கும் நின் துயர்
விழுத்த முடியுமா - கேள்
கூட்டுறவின் பின்னால் காத்துளது'
பூட்டறுத்த புதுவாழ்வு; நட பணிசெய்!

வேலணையூர் சுரேஷ்

# திங்கள் ஓர் அறிமுகம்

## விநாயகபுரம் விவசாய கூட்டுறவுச் சங்கம் (பு-து) முழங்காவில்

முழங்காவில் ஒரு விவசாய நிலம் வளமான மண் வளம் இருபாட்டி மண், செம்பாட்டுமண் என இருவகைப் படுத்தலாம். பணப்பயிர்கள் என சொல்லப்படும் புகையிலை, வாழை, உருளைக் கிழங்கு, மிளகாய் போன்ற பயிர்ச்செய்கைக்கு உகந்த இடம் ஆயினும் இப்பகுதி விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத பின்தங்கிய பிரதேசமாகவும் காட்சியளிக்கிறது

இப்பிரதேச மக்களின் விவசாய தேவைகளை பூர்த்தி செய்யவும், இவர்களது சமூக பொருளாதார மேம்பாடுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும் 1993ம் ஆண்டு முழங்காவில் பிரதேச விவசாயிகள் ஒன்றிணைந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது தான் விநாயகபுரம் விவசாய கூட்டுறவுச் சங்கம்.

கூட்டுறவுத் திணைக்களத்தின் கட்டமைப்பின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் விவசாய அங்கத்தவர்களின் பொதுச்சபை கூட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஏழு பேர் கொண்ட நெறியாளர் சபை இச் சங்கத்தை நிர்வகித்து வருகிறது தற்போது முழங்காவில் பிரதேசத்தை உள்ளடக்கியதாகவே செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறோம். எதிர் காலத்தில் பூநகரி பிரதேச செயலர் பிரிவை எல்லைப்பரப்பாக கொண்டு இயங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்,

சங்கம் ஆரம்பிக்கப் படுவதற்கு முன்னர் இப்பகுதி விவசாயிகள் தங்கள் உச்சப் பயன்பாட்டை பெற்றுக் கொள்ள பல்வேறு காரணிகள் தடையாக இருந்தன, அத் தடைகளை நீக்கி பயனாளிகளின் தேவைகளை இனம் கண்டு அவர்களது தேவைகளை பூர்த்தி செய்வது எமது நோக்கமாகும்

கடந்த ஐந்து வருடங்களாக சங்கம் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்குவதில் முன்னேற்றம் கண்டுள்ளது. கடந்த காலங்களில் தென்னிலங்கையில் இருந்து விவசாய உள்ளீடுகளை உரம், கிருமி நாசினி, நல்லின நாற்றுகள், உபகரணங்கள், மண்ணெண்ணெய் என்பவற்றை தருவித்து வழங்கி வந்துள்ள போதிலும் பல சிரமங்களை எதிர் நோக்குகின்றோம் ஆயினும் ஏனைய கூட்டுறவுச் சங்கங்களின் பங்களிப்போடு தேவையான உள்ளீடுகளை பெற்றுக் கொடுக்கின்றோம்.

குழாய் கிணற்றை நம்பியே விவசாயத்தில் ஈடுபடுகிறார்கள். நீர் இறைப்புக்கு மண்ணெண்ணெயே பிரதானம் இம் மண்ணெண்ணெயை பூநகரி ப.நோ.கூ மூலம் கலந்து விநியோகித்து வருகின்றோம்.

பூ. நவரட்ணம்
தலைவர்
வி வி கூ. சங்கம்
முழங்காவில்

01 பயனாளிகளுக்கு உள்ளீடுகளை வழங்கி விளை பொருட்களை பெற்று சந்தைப் படுத்திக் கொடுப்பது எமது பிரதான நோக்கமாகும் (கடந்த காலங்களில் உருளைக் கிழங்கிற்கு நல்ல சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்)

02 முன்னோடி விவசாயிகளை தெரிந்தெடுத்து: விதை தானிய உற்பத்திக்கு தேவையான விதை பொருட்கள் உள்ளீடுகள் என்பனவற்றை வழங்கி உற்பத்தியை பெருக்கியுள்ளோம்

★ குரக்கன், சோளம், பயறு, உழுந்து போன்ற சிறு தானியங்களை கொள்வனவு செய்து மாவாக்கி பைக்கட்டுகளில் அடைத்து சந்தைப் படுத்த ஆரம்ப வேலைகளை மேற்கொண்டுள்ளோம்.

(6-ம் பக்கம் பார்க்க)

# 'சங்கமம்' குறுக்கெழுத்துப் போட்டி

இல - 1 ன் விடைகள்

| இடமிருந்து வலம் | | மேலிருந்து கீழ் | |
|---|---|---|---|
| 1 | கூட்டுறவு | 1 | கூந்தல் |
| 11 | நைல் | 2 | ஊடுருவல் |
| 13 | தகவல் | 12 | கொலர் |
| 19 | இருமல் | 14 | கமலம் |
| 26 | ஊர்வலம் | 16 | இரவல் |
| 31 | ஓம் | 29 | நம்(பு) |
| 34 | ரதி | | |

# சங்கமம் தேடல் அரங்கு

(வினாடி வினா) 1 ற்கான விடைகள்

வினா இல - 1

1 றொச்டேல் முன்னோடிகள்
2 டிசம்பர் மாதம் 5 ம் திகதி
3 கணியன் பூங்குன்றனார்
4 காலை 10 மணி 48 நிமிடம்
5 துருக்கி
6 றொபேட் ஓவனினுடைய கூற்று
7 கபில் தேவ்
8 இளவரசி டயானா இங்கிலாந்து (வேல்ஸ்)
9 மார்ஸ் பாத் பைண்டர் - அமெரிக்காவினுடையது
10 அலெக்ஸாண்டர் கிரகாம் பெல் - அமெரிக்கா

# ஆதரவற்ற குழந்தைகளுக்கு ஒளியூட்டும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

நேர்காணல்

"அம்மாவும் நீயே அப்பாவும் நீயே அன்புடனே ஆதரிக்கும் தெய்வமும் நீயே" என்ற பழம்பெரும் பாடல் வரிக்கு இலக்கணம் வகுத்தாற் போல் அநாதைகள், ஆதரவற்றோர்கள் என சமூகத்தினால் ஒதுக்கப்பட்ட பாலகர் முதல் பலதரப்பட்டோருமான நூற்றுக்கணக்கானவர்களை அன்புக்கரம் நீட்டி அரவணைத்துக் காத்து வரும் ஓர் இணையற்ற நூதனமான குருகுலம்-காந்தி நிலையம் என்ற இணை நிறுவனம் குறித்து அந் நிறுவனத்தின் இணைப்பாளரும் குருகுல குழந்தைகளால் 'மாமா' என செல்லமாக அழைக்கப்படுபவருமான திரு. ந. திருஞானமூர்த்தி அவர்களுடனான நேர்காணல்:

★ தங்களின் காந்தி நிலையம் - குருகுலம் என்ற இணை நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதற்கான காரணம்-நிறுவனத்தின் நோக்கமெவை என்று கூறுவீர்களா ?

● எமது சமுதாயத்தில் இளம் சந்ததியினர் எந்த வகையிலும் தாக்குறைவாக குறிப்பாக அநாதை ஆதரவற்றவர் என்ற வகையில் அடக்கப்படக் கூடாது என்பதற்காகவும், இருள் சூழ்ந்த அவர்களின் எதிர்காலம் ஒளிமயமானதாக மாற்றப்பட வேண்டும் என்பதற்காகவுமே எமது நிறுவனம் சேவை புரிந்து வருகின்றது. 1980ற்கு முற்பட்ட காலத்தில் குழுவொன்றினால் நிர்வகிக்கப்பட்ட எமது நிறுவனம் 90ல் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் பொறுப்பேற்கப் பட்டபின் உயரிய வளர்ச்சியில் வீறு நடை போடுகின்றது அதிலும் சிறப்பாக "ஆதரவற்றோர், அநாதைகள் ஒதுக்கப்பட்டவர்களாக இல்லாமல் மற்றவர்களைப்போல் சமூகத்தில் உயர்த்தப்பட வேண்டும் மதிக்கப்பட வேண்டும்" என்ற தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் எண்ணத்திற்கு அமைவாகவே சேவையாற்றுகின்றோம்

★ உங்கள் நிறுவனத்திற்கான நிதியுதவி எவ்வாறு கிடைக்கப் பெறுகின்றது ?

● எமக்கு வேண்டிய நிதி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினாலேயே கிடைக்கப்பெறுகின்றது. 1996ம் ஆண்டு ஆவணி மாதம் 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையினால் சுமார் ஒரு கோடி ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியான கட்டிடம், தளபாடம், வாகனம் ஆகிய சொத்துக்களை இழந்து தற்போது முழங்காவிலில் செயற்பட்டு வருகின்ற எமது நிறுவனத்திற்கென பல தொண்டர் ஸ்தாபனங்களிடமும் நிறுவனங்களிடமும் உதவி கோரிய போது அவைகள் 'தாராளமாக' எனவாய் நிறையக் கூறின. ஆனால் இதுவரை எதுவுமே செயலாகவில்லை.

★ குருகுலம் - காந்தி நிலையம் இவற்றோடு வேறு துணை நிறுவனங்கள் உண்டா ?

● ஆம். 26-4-1958ல் ஆரம்பிக்கப்பட்ட காந்தி நிலையம், 24-2-1964ல் ஆரம்பிக்கப்பட்ட குருகுலம் இவற்றுடன் 6-02-1997ல் ஆரம்பிக்கப்பட்ட குழந்தைகள் பராமரிப்பு நிலையம் 6-8-1997ல் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் ஆகிய துணை நிறுவனங்களும் இயங்குகின்றன இவை தவிர கல்விச்சேவை நிலையம், தட்டச்சு, தையல், தச்சுவேலை நீரிறைக்கும் இயந்திரம் திருத்துதல், றேடியோ, ரீவி டெக். திருத்தம் போட்டோ பிரதி இயந்திரம் இயக்குதல் ஆகியவற்றிற்கான பயிற்சி நிலையங்களும் மாணவர்களின் எதிர்கால வாழ்வை உயரவைத்திட தேவையான தொழில் நுட்பத்தை பெற்றுக் கொடுப்பதற்கென இயங்கி வருகின்றன

★ தற்போது எத்தனை பிள்ளைகள் தங்களின் குருகுலம் - காந்தி நிலையத்திலே பராமரிக்கப்பட்டு வருகிறார்கள் ?

● குருகுலம் - காந்தி நிலையம், சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் என்பன மூன்றிலுமாக நானூற்றி எண்பத்தி இரண்டு பிள்ளைகள் உள்ளனர் அத்துடன் குழந்தை பராமரிப்பு நிலையத்தில் ஒரு மாதம் தொடக்கம் இரண்டு வயதுவரையான பன்னிரண்டு (12) பச்சிளம் பாலகர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்

★ தங்களின் பராமரிப்பிற்கென பிள்ளைகளை எவ்வாறு சேர்த்துக் கொள்வீர்கள் ?

● நாங்களாக யாரையும் சேர்த்துக் கொள்வதில்லை பராமரிப்பிற்குரிய பிள்ளைகளை இனங்கண்டு சிபார்சு செய்யும் தமிழர்புனர் வாழ்வுக் கழகத்தின் அனுமதியுடனேயே பிள்ளைகளை சேர்த்துக் கொள்ளுவோம்

★ பிள்ளைகளை பராமரிப்பதிலே எத்தகைய போக்கினை நீங்கள் கடைப்பிடிக்கின்றீர்கள் ?

● நாங்கள் அநாதைகள் ஆதரவற்றவர்கள் என்ற எண்ணம் பிள்ளைகளின் மனத்திலே துளியளவும் ஏற்படாதவாறு அவர்களின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்து அவர்கள் உடல் உளரீதியாக பாதிக்கப்படாதவாறு பராமரிப்பிலே பக்குவம் பேணி வருகின்றோம்

★ நன்மை தீமைக் கொண்டாட்டங்கள் இங்கே எவ்வாறு மேற்கொள்ளுகின்றீர்கள் ?

● தீமையான (துயரமான) நிகழ்வு எதும் நடைபெறவில்லை. நன்மையென சொல்லக் கூடியவை; பிறந்த நாள், பூப்புனித நீராட்டு விழாக்களை குறிப்பிடலாம் ஒரு மாதத்தில் பூப்பெய்திய பெண்களுக்கு அந்த மாதக்கடைசி தினத்தில் ஒன்றாக பூப்புனித நீராட்டு விழா செய்துள்ளோம் இதுவரை இத்தகைய 27 விழாக்கள் செய்துள்ளோம்.

பிறந்த நாட்களும் இவ்வாறே தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் திரு ரவி அண்ணா பிள்ளைகள் மீது அளவு கடந்த பாசம் கொண்டவர்.

★ நிலையத்தில் பராமரிப்பிற்கான செலவினங்கள் எத்தகையன என கூறமுடியுமா ?

● இங்கே செலவினங்கள் எனும்போது ஒரு நேரச் சாப்பாட்டிற்கு ஒன்பதாயிரம் (9000/-) ரூபாவும், மாத மருத்துவச் செலவாக ஐயாயிரம் ரூபாவும் (5000/-) ஊழியர் சம்பளம் மாதம் ஐம்பதாயிரம் (50,000) ரூபாவும், ஒரு தடவை சீருடை அமைப்பிற்கு இரண்டு இலட்சம் ரூபாவும் (200000/-) என அமையும்.

★ பிள்ளைகளின் சிரமமுறையிலான வேலைத்திட்டங்கள் ஏதேனும் உண்டா ?

● ஆம் பிரதி ஞாயிறு தோறும் பிள்ளைகள் நிலைய வளவினுள் சிரமதானம் மேற்கொள்வார்கள் ஒவ்வொரு மாத இறுதியிலும் வைத்தியசாலை, பாடசாலை ஆலயம் போன்ற பொது இடங்களில் சிரமதானம்; சனிக்கிழமை தோறும் மாணவர் மன்றக் கூட்டம் நடைபெறும் அத்துடன் ஒவ்வொரு மாதக் கடைசி நாளிலும் வீடியோ மூலம் தமிழீழ எழுச்சிப் படங்கள் காண்பிக்கப்படுகின்றன.

★ இந்த நேர்காணல் மூலம் 'சங்கமம்' வாசகர்களுக்கு நீங்கள் கூற விரும்பும் கருத்து செய்தி என்ன என்பதை கூறுங்களேன் ?

● பல்வேறு இன்னல்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் இந்த நிறுவனங்களை கொண்டு நடாத்துகின்றோம் இந்தநிலையில வசதிபடைத்த நிறுவனங்களோ தனி நபர்களோ மனமுவந்து உதவி புரிய முன்வரவேண்டும் என்பதை எதிர்பார்க்கின்றோம் எம்மால் பராமரிக்கப்படும் பிள்ளைகளுக்குரிய ஒரு நேர அல்லது ஒரு நாள் உணவையோ அன்றி கல்வி கற்றல் உபகரணங்களையோ அன்றி சீருடைகளையோ வேறுபயன் மிக்க பாவனைப்பொருட்களையோ அன்பளிப்பாக தந்து தவமுனைவரின் அன்பளிப்பாக நாம் பெருநன்றியுடன் ஏற்றுக் கொள்வோம் வெறும் வாய்வார்த்தையாக இல்லாமல் உதவி புரிந்து செயலாக காட்டுவதன் மூலம் இத்தகைய மனிதாபிமான உதவிகளைப்புரியமேற்குறித்தவர்கள் முன்வரவேண்டும் என்பதே இந்தநேர்காணல்மூலம் நான் கூறும் செய்தி ஆகும்

நேர்கண்டவர்
V K காந்தன்

# ஒரு நிறுவனத்தின் வெற்றிக்கு வித்திடுவது; பாதீட்டுக் கட்டுப்பாடு

பா. பாலச்சந்திரன்
விரிவுரையாளர்
-வணிக முகாமையியல் துறை-

1.0. அறிமுகம்

ஒரு நிறுவனத்தின் வெற்றியானது அதன் செயற்பாடுகளை முறையாக திட்டமிட்டு அதற்கேற்ப அதனைச் செயல்படுத்துவதிலேயே தங்கியுள்ளது. அநேகமாக நிறுவனங்களின் தோல்விக்கு எதிர்காலம் பற்றிய முன்னுணர்வுகளை மேற்கொண்டு தேவையான திட்டங்களை முறையாக வகுக்காமையும் வகுக்கப்படும் திட்டங்கள் முறையாக அமுல்படுத்தப்படாமையும் காரணங்களாக அமைகின்றன

இக்கட்டுரையில் ஒரு நிறுவனம் தனது குறிக்கோளினை அடைந்து கொள்வதற்காக தேவையான கொள்கைகளை எதிர்காலம் பற்றி முன்னுணர்ந்து வகுத்து அதனை கணிய வடிவில் வெளிப்படுத்தும் பாதீட்டுத் திட்டமிடலைப் பற்றி ஆராயப்படுகின்றது.

2.0 பாதீடு

பாதீடு என்பது எதிர்காலத்தைப் பற்றி முன்னோக்கியே மதிப்பீடு செய்யப்பட்டு கணிய வடிவில் வெளிப்படுத்தப்பட்ட விபரமான திட்டமாகும். இதுஒரு நிறுவனம் முழுவதற்கும் அல்லது நிறுவனத்தின் ஒரு பகுதிக்கு அல்லது நிறுவனத்தின் ஒரு தொழிற்பாட்டுக்கு தயாரிக்கப்படலாம் பட்டயமுகாமைக் கணக்காளர் நிறுவனம் (லண்டன்) பாதீடு என்பதற்கு பின்வருமாறு வரைவிலக்கணம் கூறுகின்றது.

"குறிக்கோளினை அடைந்து கொள்வதற்காக குறிப்பிட்ட காலப்பகுதியில் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகளை அக்காலப் பகுதிக்கு முன்னரே நிதி, கணிய வடிவில் தயாரித்து அங்கீகாரம் பெறப்பட்ட கூற்று பாதீடு எனப்படும்." இது வருமானப் பாதீடு ஆகவோ, செலவுப் பாதீடாகவோ அல்லது மூலதனப்பாதீடு ஆகவோ இருக்க முடியும்

பாதீட்டினை தயாரித்தலை நிறுவனத்தின் குறிக்கோள் கொள்கைகளை விபரமான திட்டங்களாக மாற்றும் செய்முறை எனவும் அழைக்கலாம் பாதீட்டினைத் தயாரிக்கும் பொழுது வியாபாரச் சூழலில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிக்கத் தக்கதாக பாதீடுகள் காலாகாலத்தில் மீளாய்வு செய்யப்பட்டு தேவையான மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்

3.0. பாதீட்டின் தன்மைகள்

(அ) திட்டமிடல்

நிறுவனத்தின் திட்டமிடல் கருமம் முறையாக மேற்கொள்ளப்பட வழிவகுக்கின்றது எதிர்காலப் பல்வேறு முறைகளைப் பின்பற்றி முன்னுரைப்பட்டு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியவை பாதீடுகளாக கணிய வடிவில் தயாரிக்கப்படுகின்றன. இங்கு பல்வேறு திட்டங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு உத்தம பலனைத் தரும் திட்டங்களே இறுதியில் தயாரிக்கப்படுகின்றன.

(ஆ) ஒருங்கிணைத்தல்

நிறுவனத்தில் உள்ள பல்வேறு திணைக்களங்களின் செயல்பாடுகள் பிரதானபாதீட்டினூடாக ஒருங்கிணைக்கப்படுகின்றது இதன் மூலம் திணைக்களங்களுக்கிடையில் முரண்பாடுகள் நீக்கப்பட்டு நிறுவனத்தின் குறிக்கோளினை அடைந்து கொள்வதாகு முதிர்சையான நோக்குடன் திணைக்களங்கள் செயல்படும்.

(இ) கட்டுப்படுத்தல்

குறிப்பிட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டியவை முன்னரேயே கணிய வடிவில் விபரமான திட்டங்களாக (பாதீடுகள்) தயாரிக்கப்பட்டிருப்பதனால் அக்காலப் பகுதியில் உண்மையாக இடம் பெறும் விளைவுகள் பாதீட்டுடன் ஒப்பிடப்பட்டு ஏற்படும் வேறுபாடுகளைத் திருத்துவதற்கு தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ள முடியும்

(ஈ) தொடர்பு கொள்ளல்

பாதீட்டினை தயாரிக்கும் செய்முறையில் எல்லா மட்ட முகாமையாளரும் பங்குகொள்கின்றனர் நிறுவனத்தின் குறிக்கோளினை அடைந்து கொள்வதற்கு தேவையான கொள்கைகள் உயர்மட்ட முகாமையாளர்களினால் பாதீட்டு வடிவில் தயாரிக்கப்படுகின்றன அவற்றினை செயற்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்கள் பற்றி கீழ் மட்ட ஊழியர்களிடம் விபரங்கள் பெறப்பட்டு சிக்கல்கள் ஏற்படாத விதத்திலேயே பாதீடுகள் தயாரிக்கப்படுகின்றன பாதீடுகள் தயாரிக்கப்பட்ட பின்னர் ஒவ்வொருவகைப் பாதீடுகளோடும் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கும் அது பற்றிய விபரங்கள் தெரிவிக்கப்படுகின்றன. உண்மையில் நிறுவனத்தின் குறிக்கோள் கொள்கையினை அதனைச்செயல்படுத்தவேண்டியவர்களுக்கு தெரிவிக்கும் ஊடகமாக பாதீடு காணப்படுகின்றது

(உ) அதிகாரம் வழங்குதல்

பாதீடுகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட பின்னரே அவை அமுல்படுத்தப்படுகின்றன எனவே பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட செலவினங்களை மேற்கொள்ள

(தொடரும் —)

சங்கமம்
SANGAMAM

ஆறு 1
அருவி 4
டிசம்பர்

கூட்டுறவுக் குரல் 1997
பிரதான வீதி, ஸ்கந்தபுரம்.

# புதிய சிந்தனை! புதிய உற்சாகம்!

1998 ம் ஆண்டை வாழ்த்தி வரவேற்போம். பல புதிய சவால்களுக்கு முகம் கொடுக்கப்போகின்றோம். போராடும் மண்ணில் நின்று கொண்டு கடுமையாக உழைத்து வரும் கூட்டுறவுத் தலைமைகள் களைத்துப் போயுள்ள நிலையிலும், இன்னும் உற்சாகம் குறைய வில்லை மக்களுக்கு சேவையாற்றுவதில் தீவிரமாக இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து புதிய சிந்தனைகள் உருப்பெறுகின்றன அதன் ஆழமான வெளிப்பாடுகளை சமீப காலமாக நீங்களே காணக்கூடியதாக இருந்தது அது போன்று.

இன்றைய இளைய தலை முறையினரிடமிருந்து கூட்டுறவு பற்றிய சிந்தனைகள் துளிர்விடத் தொடங்கியுள்ளன உயர் கல்வி கற்றவர்கள் கூட்டுறவுத்துறைக்குள் நுழைய அஞ்சினர் ஆனால் அந்த நிலை இன்று மாறிவிட்டது கூட்டுறவுத்துறை ஒரு கௌரவமானது பாதுகாப்பானது இதனூடாக எமது தேசத்திற்கும், மக்களுக்கும் நிறைய உதவலாம் என்னும் கோட்பாட்டை உணரத் தொடங்கி விட்டனர். இது ஒரு நல்ல ஆரோக்கியமான அறிகுறி.

அண்மையில் இலங்கைபாராளுமன்றத்தில்வரவு-செலவு திட்டத்தில் கூட்டுறவுக்கான நிதி ஒதுக்கீடு பற்றி விவாதிக்கப்பட்டது. அப்போது அங்கு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், கூட்டுறவின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் உணர்ந்து பேசினர். கூட்டுறவை வளர்ப்பதற்கு பல முன்னோடி நடவடிக்கைகளை எடுப்பதாக கூட்டுறவு அமைச்சர் சொன்னார்.

கூட்டுறவு அமைச்சரின் இந்த கூற்று எந்த அளவுக்கு நம்பகத்தன்மையுடையதோ;? இது பற்றி காலம் தான் பதில் கூற முடியுமா? கடந்த காலங்களில் சிறிலங்கா ஆட்சி பீடங்கள் கூட்டுறவுக்காக எதையும் செய்யவில்லை. கூட்டுறவுபற்றி தவறான கொள்கை வகுப்பையே மேற்கொண்டனர் அதனால் எமது கூட்டுறவு சர்வதேச தரத்துக்கு உயரமுடியவில்லை வளர்ச்சிப்பணிகள் தடைப்பட்டன; அது போகட்டும் நமது தேசத்தை பற்றி நாம் சிந்திப்போம்.

இன்று அனைவரிடமிருந்தும்! ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. வரவேற்கக்கூடிய ஒன்றாகும் இந் நேரத்தில் எமது கொள்கையின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக்கொள்வோம்.

இராணுவ ஆக்கிரமிப்புகள் காரணமாக இன்று எம் மண்ணில் மக்கள்படும் அவலங்கள் அதிகமாகியுள்ளன உணவு உறைவிடம், மருத்துவம் சுகாதாரம், கல்வி போன்ற அடிப்படை வசதிகளை கூட அளிக்க முடியாதவாறு அரசு தடைகளை போடுகிறது. கூட்டுறவாளர்களாகிய நாம் இத்தடைகளை அறுப்போம்.

இன்று எமது மக்களுக்கான தலையாய பிரச்சினை தொழிலின்மை இன்று பல இளைஞர்கள்,யுவதிகள்படித்து விட்டு வேலையின்றி இருக்கிறார்கள். இவர்களுக்கு உதவ வேண்டிய தார்மீக பொறுப்பு கூட்டுறவுக்குண்டு என்பதை கூட்டுறவாளர்கள் புரிந்து கொண்டுள்ளனர். செயற்பட முனைகின்றனர்

இந்தியா, தென்கிழக்காசிய நாடுகளில் பல கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றிணைந்து பெரும் தொழில் பேட்டைகளை உருவாக்கி வெற்றி கண்டுள்ளனர்.

அது போன்று இங்கும் வன்னி கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றிணைந்து ஏதாவது ஒரு தொழில் பேட்டையை உருவாக்க வேண்டும் அதனூடாக 100 பேராவது வேலை வாய்ப்பு பெறவேண்டும் என்பது பலருடைய கனவாகும்? இது நடக்குமா? கூட்டுறவாளர்கள் நினைத்தால் நடக்காத ஒன்று உண்டா? தொடர்ந்து சிந்திப்போம் ..............!

ஆ...ர்

# கண்ணீர் அஞ்சலி

அமரர்
## பொன்னம்பலம் தர்மலிங்கம்
முன்னை நாள் தலைவர் சி. க. கூ. ச, சமாசம்

எமது சமாசத்தின் முன்னாள் தலைவராகவும் நெறியாளர் குழு உறுப்பினராகவும் பதவி வகித்து, பெருமை சேர்த்த அமரரின் மறைவு கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம்.

சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கங்களின் சமாச பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

# சட்டத்தினால் சாதிக்கமுடியாததை

## மக்களின் மனமாற்றத்தினால் சாதிக்க முடியும்

கிளி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் சூ. சிறில்

பொதுவான பொருளாதார இடர்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளும் நோக்குடன் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு ஒருவர் பலருக்கும் பலர் ஒருவருக்கும் என்ற தத்துவத்தில் ..ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து தேசத்தில் ஆரம்பமாகிய கூட்டுறவு அமைப்பு முறையானது பிற்காலத்தில் ஸ்ரீலங்காவிலும் பரவியது

1911 ஆம் ஆண்டில் 07ம் இலக்க கூட்டுறவு சட்ட ஏற்பாட்டின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு அமைப்பு முறை காலா காலமாக சட்டங்களினாலே ஆட்சிபுரிந்ததே தவிர மக்களின் மனங்களினால் ஆட்சி புரிந்ததா என்றால் அது கேள்விக்குறியாகவே உள்ளது இந்த நிலைமை மாறி அல்லது மாற்றியமைக்கப்பட்டு மக்கள் நிறுவனமான கூட்டுறவு அமைப்பு முற்று முழுதாக மக்கள் மயமாக்கப்பட்டு மக்களிடமே கையளிக்கப்பட வேண்டும் அப்போதுதான் உறுப்பினர்களின் கூட்டு முயற்சியினால் கூட்டுறவு தன்னிறைவு பெறும்

இதைக் கருவாகக்கொண்டு கூட்டுறவின் இதயமாக விளங்கும் கூட்டுறவுக் கல்லூரியும் தனது கற்றலிலும், கற்பித்தலிலும் வழிநடத்தலிலும், மாறிவரும் சிந்தனைக்கு ஏற்ப தன்னை அமைத்துக் கொள்ள வேண்டும் மாறாக நேர்மையும், கண்ணியமும் நிறைந்த புரட்சி கரமான ஒரு பரம்பரையை உருவாக்கி அந்த பரம்பரையே கூட்டுறவின் நிர்மாணிகளாக, நிர்வாகிகளாக, ஏன் ஆட்சியாளராக மாறவேண்டுமென்பதே எனது ஆவல்.

மேலும் நமது நாடு, நமது மக்கள், நமது சொத்து என்ற மனநிலையின் ஊடாக கூட்டுறவை மறு நிலைப்படுத்துவோம், இவ்வாறு கிளி/ மாவட்ட கூட்டுறவுக் கல்லூரியின் சாதாரணதர பயிற்சி நெறி மாணவர்களின் பயிற்சி நிறைவு விழாவில் கலந்து கொண்டு சிறப்பு சொற்பெருக்காற்றும் போது கூறினார்.

## வதிவிட வேளாண்மை விழா 1996 | 1997

கிளி/மாவட்ட வதிவிட வேளாண்மை போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய விவசாயிகளை கௌரவித்து பரிசு வழங்கும் விழா 10-2-1997 புதன்கிழமை ஸ்கந்தபுரத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டதுடன் விழாவில் கலந்து கொண்ட பாடசாலை மாணவர்களுக்கும், விவசாயிகளுக்கும் விவசாயம் சம்பந்தமான பொது அறிவுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டது. மேற்படி நிகழ்வில் கூட்டுறவாளர்கள், விவசாயத்திணைக்களம் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் விவசாய பொதுமக்கள், அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்

## 'சங்கமம்' அக்கராயன் கரைச்சி வடக்கு ப. நோ. கூ. ச. ல் வெளியிடப்பட்டது

அக்டோபர் மாத "சங்கமம்" அக்கராயன் ப. நோ. கூ. சங்க தலைமைப் பணிமனையில் தலைவர் ச. கிருஷ்ணபிள்ளை அவர்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது கூட்டுறவுப் பிரமுகர்கள், கூட்டுறவுப் பணியாளர்கள் மற்றும் பலர் பங்குபற்றி விழாவை சிறப்பித்தனர் "சங்கமம்" பல்சுவை இதழாக மலர வேண்டுமென கூட்டுறவாளர்களால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

கல்மடுவில் அமைந்துள்ள கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்க தலைமைப் பணிமனையில் தலைவர் இ. சாரதிகேசு அவர்கள் தலைமையில் 97 நவம்பர் மாத சங்கமம்" வெளியீட்டு விழா நடைபெற்றது

கூட்டுறவுத் துறை சார்ந்த பிரமுகர்கள் "சங்கமத்தின்" வளர்ச்சி பற்றி எடுத்துக் கூறினர். கூட்டுறவாளர்கள், கூட்டுறவுப்பணியாளர்கள் பங்குபற்றி சிறப்பித்தனர்

(தொடர்ச்சி)

### திங்கள் ..

04 நல்லின விதை உருளைக்கிழங்கை தருவித்து பயனாளிகளுக்கு வழங்குவதன் மூலம் அதிக விளைச்சலை பெறக் கூடியதாக இருக்கும் சராசரி இப்பிரதேசத்தில் சராசரி காலபோகத்திற்கு 60,000 முதல் 90 ஆயிரம் Kg வரை விளைச்சலைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம், சந்தை வாய்ப்புகள் கிடைக்குமானால் மேலும் அதிக பிரதேசங்களில் உருளைக் கிழங்கு பயிர் செய்கையில் ஈடுபட தயாராக இருக்கின்றோம்.

05 விவசாய துறையினூடாக முழங்காவில் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வது நன்மையாகுமென நம்புகின்றோம்

அந்த வகையில் விவசாயத்தை நம்பியே முழுமையாக வாழும் மக்கள் தங்களுக்கு தேவையான உள்ளீடுகள் பெறுவதில் உள்ள பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதால் விவசாய துறையில் ஈடுபட பெரிதும் தயங்குகிறார்கள்

# கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பரீட்சை

## (சாதாரணம்) பெறுபேறுகள்

1997 ஜனவரி ஜூன் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபையால் 1997 ஜனவரி ஜூன் காலப்பகுதிக்கு நடாத்தப்பட்ட பயிற்சி நெறியில் பயின்ற மாணவருக்கு நடைபெற்ற பரீட்சையின் பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளன

மொத்த பயிற்சியாளர் 31 பேரில் சித்தியடைந்தோர் 26 பேர் இது 83% ஆகும்.

இவர்களில் இரண்டாம் பிரிவில் 10 பேரும் 3ஆம் பிரிவில் 16பேரும் சித்திபெற்றுள்ளனர்

இவர்களில் அதிசிறந்த பெறுபேற்றை பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு:

01 தோமஸ் டொன் பொஸ்கோ 4A, B C,

02 இ சற்குணேஸ்வரி 4A, B C,

03 ந கணேசலிங்கம் 4A, B. C.

### கூ. பணியாளருக்கு கூ. பயிற்சி வழங்கல்

எதிர்காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் உச்சபயன்பாட்டை பெறுவதற்கு பணியாளர்களின் கூட்டுறவு கல்வித்தரத்தை உயர்த்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது எனவே கூட்டுறவு பயிற்சி பெறாதபணியாளர்களைகூட்டுறவுக் கல்லூரிப் பயிற்சிக்கு அனுப்பி சித்திபெற வைக்கு விக்கலாமென கிளி- கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் தலைவர்பொதுமுகாமையாளருக்கு நடைபெற்ற கலந்துரையாடலில்வலியுறுத்தப்பட்டுள்ளது

## கூட்டுறவுக்கு இழப்பு

முதிர்ந்த கூட்டுறவாளரும் பூநகரி ப. நோ. கூ. ச. நெறியாளர் சபை உறுப்பினரும் பொன்னம்பலம் தர்மலிங்கம் அவர்கள் இயற்கை எய்தினார். அன்னாரது இழப்பு கூட்டுறவு உலகுக்கு பேரிழப்பாகும். பூநகரி ப. நோ. கூ. சங்கம் கிளி - மாவட்ட கூட்டுறவு சபை ஆகியவற்றின் உப தலைவராகவும், நெறியாளராகவும் பதவி வகித்துள்ளார். அத்துடன் கிளி. சிக்கன கடனுதவி சமாசத்தில் தலைவராகவும் பணி புரிந்துள்ளார். சிறந்த சமூக சேவையாளருமாவார்.

### கூட்டுறவுப்..

உயரும் பணியாளர் ஓய்வு பெறும் போது பணிக்கொடை வழங்குதல் இதுவரை காலமும் ஆரம்ப அடிப்படைச் சம்பளம் உழைத்த சம்பள ஏற்றம் இரண்டின் மொத்தப் பெறுமதியின் அரைப் பங்கு ஆகும். தற்போதைய அளவுத்திட்டம் எடுத்து வந்த படிகளையும் உள்ளடக்கியே ஒரு அளவுத்திட்டத்தின் கீழ் கொண்டுவந்தமையால் கூடுதலான தொகை பணிக்கொடையால் கிடைப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது

### 97 யூலை முதல் கூ. சங்கப்பணியாளர் சம்பளம் அதிகரிப்பு

கூட்டுறவு ஊழியர் சம்பள மீளாய்வு 3/97 ற்கு அமைய 97 யூலை முதல் புதிய சம்பளத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1997 டிசம்பர் முதல் புதிய சம்பளத்திட்டத்தின் கீழ் பணியாளர் சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். அரிய சுப கிடைக்கும்,

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியம் சார்பாக இப்பத்திரிகை கிளிநொச்சி மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கங்களின் சமாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:- ஆசிரியர் ப கனகலிங்கம்